## DEPOSITION OF WITNESS

**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC 522/ 2018

**Sessions**

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | PW 1 | **Caste** | |
| **NAME** | ராஜாக்கண்ணு | **Calling** | |
| **Father's Name** | அடைக்கலம் | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 06-05-2021

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி, ஆயங்குடி, குலமங்களம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு காலை 10 மணியளவில் நானும், எனது மகள் மகாலெட்சுமியும் ஆயங்குடியில் உள்ள எனது மனைவி பாகத்திற்குறிய தென்னந்தோப்பிற்கு சென்றோம். அப்போது அங்கு எதிரிகள் லெட்சுமணனும், ராஜேந்திரனும் என்னை உனக்கு இங்கு சொத்து கிடையாது என்றும், நீ எப்படி இங்க வரலாம் என்று சொல்லி கம்பால் எனது வலது தோல்ப்பட்டையில் அடித்தார்கள். எனது மகள் மகாலெட்சுமியையும் எதிரி பாலசுந்தரியும் அவரது மகளும் அடித்தார்கள். அதன்பின்பு ஆம்புளன்ஸ் மூலம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு நான் ஐந்து நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். அந்த புகாரை நான் போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்,

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC 522/ 2018

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | PW 2 | **Caste** |
| **NAME** | அருவகம் | **Calling** |
| **Father's Name** | பழனிவேலு | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 06-05-2021

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி, ஆயங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா கணவர் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு காலை 10 மணியளவில் நானும் எனது மச்சான் அ.சா.1 ராசாக்கண்ணும் அவரது மகள் மகாலெட்சுமியும் சேர்ந்து என் மச்சானின் மனைவி பாகத்திற்குறிய ஆயங்குடி ஆற்றங்கரையோரம் உள்ள தென்னந்தோப்பின்று சென்றோம். அங்கு எதிரிகள் நாங்கு பேரும் சேர்ந்து உனக்கு சொத்தும் இல்லை ஒன்றும் கிடையாது என்று சொல்லி என்னை கம்பால் முதுகிலும் வாயிலும் அடித்துவிட்டார்கள். ராஜேந்திரன் எனது வாயில் அடித்தார். அதில் எனக்கு இரண்டு பல் உடைந்து ரத்தம் வந்தது. என்னுடன் வந்த மகாலெட்சுமியையும் எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து அடித்தார்கள். எனது மச்சானையும் அடித்துவிட்டார்கள். அதன்பின்பு எங்களை அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் ஐந்து நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC 522/ 2018

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | PW 3 | **Caste** |
| **NAME** | மகாலெட்சுமி | **Calling** |
| **Father's Name** | க/பெ. கருப்பையா | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 06-05-2021

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் திருமணம் ஆகி அழியாநிலையில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராஜாக்கண்ணு எனது அப்பா. எதிரிகள் நான்கு பேரையும் எனக்கு தெரியும். கடந்த நாங்கு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை நானும் எனது அப்பா ராசாக்கண்ணு, எனது சித்து அருவகமும் ஆயிங்குடி தெற்கே உள்ள எனது அம்மா பாகத்திற்குறிய தென்னந்தோப்பிற்கு சென்றிருந்தோம். அங்கு எதிரிகள் நாங்குபேரும் சேர்ந்து நீங்கள் இங்கு ஏன் தேங்காய் பறிக்க வருகிறீர்கள் என்று சொல்லி எங்களை அடித்துவிட்டார்கள். எனது அப்பாவை கம்பால் கை தோல்பட்டையில் அடித்துவிட்டார்கள். என்னை ராஜேந்திரனம் பஞ்சவர்ணமும் சேர்ந்து கம்பால் கையில் அடித்தார்கள். அதில் எனக்கு கையில் வீக்கம் ஏற்பட்டது. என் அப்பாவை அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுவந்தோம். என் அப்பா ஐந்து ஆறு நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.